**மோட்டார் வாகன விபத்துக் கோருரிமை தீர்ப்பாய நீதிமன்றம், கரூர்.**

முன்னிலை – திரு.ஆர்.சண்முகசுந்தரம், பி.காம்., எல். எல்.பி.,

விபத்துக் கோருரிமை தீர்ப்பாய நீதிபதி,

முதன்மை மாவட்ட நீதிபதி, கரூர்.

2024-ஆம் வருடம் ஜுன் மாதம் 25-ஆம் தேதி செவ்வாய்க்கிழமை

**மோட்டார் வாகன விபத்து கோருரிமை அசல் மனு எண்.129/2023**

(CNR No.TNKR01-000893-2023)

1) பழனியம்மாள், க/பெ. லேட். ராமசாமி, வயது 69, நெ.39, சேமங்கி, வேட்டமங்கலம் மேற்கு, சேமங்கி, புகளூர் தாலுகா, கரூர் மாவட்டம் – 639 117.

2) பூங்கொடி, க/பெ. செல்வராஜ், வயது 49, நெ.100, மறவாபாளையம், நொம்பல், வேட்டமங்கலம் மேற்கு, புகளூர் தாலுகா, கரூர் மாவட்டம் – 639 117.

3) ஈஸ்வரி, க/பெ.மோகன், வயது 45, நெ.3/17, குடித்தெரு, ரா. புதுப்பாளையம், இராமதேவம் அஞ்சல், பரமத்தி வேலூர் தாலுகா, நாமக்கல் மாவட்டம் – 637 203.

4) ராஜேந்திரன், த/பெ.லேட்.ராமசாமி, வயது 42, நெ.39, சேமங்கி, வேட்டமங்கலம் மேற்கு, சேமங்கி, புகளூர் தாலுகா, கரூர் மாவட்டம் – 639 117.

5) இளையராஜா, த/பெ. லேட்.ராமசாமி, வயது 37, நெ.13/41, வேட்டமங்கலம் மேற்கு, சேமங்கி, புகளூர் தாலுகா, கரூர் மாவட்டம் – 639 117.

. . . மனுதாரர்கள்

**/எதிர்/**

1) ஈஸ்வரி, க/பெ. அன்புசெல்வன், நெ.1/2, கலையரசி இல்லம், சிவராமன் நகர், புஞ்சைபுகளூர், வேலாயுதம்பாளையம், கரூர் மாவட்டம் - 639 117.

2) மெசர்ஸ்.ரிலையன்ஸ் ஜெனரல் இன்சூரன்ஸ் கம்பெனி லிட், சார்பாக மேலாளர், நெ.178, இரண்டாம் தளம், 10th கிராஸ், தில்லை நகர் கிழக்கு, திருச்சி - 620 018. . . . எதிர்மனுதாரர்கள்

பாலிசி எண்:- 799221823750004839

பாலிசி காலம்:- 26.12.2018 ம் தேதி முதல் 25.12.2023

மனு தாக்கல் செய்யப்பட்ட நாள்: - 21.03.2023

மனு கோப்புக்கு எடுக்கப்பட்ட நாள்:- 27.04.2023

இம்மனு கடந்த 03.06.2024 ஆம் தேதி இறுதியாக என் முன்பு விசாரணைக்கு கொண்டு வரப்பட்டு, மனுதாரர்கள் தரப்பில் கற்றறிந்த வழக்குரைஞர் திரு.K.சுரேஷ் மற்றும் 2 ம் எதிர்மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்குரைஞர் திரு.G.V.பாலாஜி ஆகியோர்கள் முன்னிலையாகியும், 2 ம் எதிர்மனுதாரர் தரப்பிற்கு போதிய சந்தர்ப்பம் வழங்கியும் எதிருரை தாக்கல் செய்யவில்லை என்பதால் 2 ம் எதிர்மனுதாரருக்கு எதிராக ஒருதலைபட்ச உத்தரவு பிறப்பிக்கப்பட்டும், 1 ம் எதிர்மனுதாரர் அழைப்பாணை பெற்றுக்கொண்டு நீதிமன்றத்தில் அழைத்தும் ஆஜரில்லை என்பதால் 1 ம் எதிர்மனுதாரருக்கு எதிராக ஒருதலைபட்ச உத்தரவு பிறப்பிக்கப்பட்டும், வழக்கு கோப்புகளை பரிசீலித்தும், மனுதாரர்கள் தரப்பு வாதுரையை கேட்டறிந்த பின்பும், இதுநாள் வரை இம்மன்ற பரிசீலனையில் இருந்து இந்நீதிமன்றம் வழங்கிடும்,

## உத்தரவு

மனுதாரர்களுக்கு விபத்து இழப்பீடாக ரூ.50,00,000/–மும், அதற்கு மனு தாக்கலான தேதியிலிருந்து 9% பின்வட்டியுடன் வழக்கு செலவுத்

தொகை வழங்கவும் எதிர்மனுதாரர்களுக்கு எதிராக உத்தரவிடக் கோரி மோட்டார் வாகனச் சட்டம் 1988, பிரிவு 141 மற்றும் 166ன்படி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

1) <u>மனுதாரர்கள் தரப்பு மனுவின் சுருக்கம்</u> :-

கடந்த 26.09.2022ம் தேதியன்று மாலை சுமார் 6.15 மணியளவில் ராமசாமி என்பவர் நொய்யல் - வேலாயுதம்பாளையம் மெயின் ரோட்டில் வாதியின் வீட்டின் மேல்புறம் ரோட்டின் இடதுபுறம் ஓரமாக மண்ரோட்டில் நின்று கொண்டிருந்தபொழுது, மேற்படி ரோட்டில் மேற்கிலிருந்து கிழக்கு நோக்கி வந்த TN-47-AQ-7927(Splender) என்ற பதிவெண் கொண்ட இரு சக்கர வாகனத்தை அதன் ஓட்டுநர் அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும் ஓட்டி வந்து இடதுபுறம் ஓரமாக மண்ரோட்டில் நின்று கொண்டிருந்த ராமசாமியின் மீது பலமாக மோதியதில் ராமசாமிக்கு தலையில் பலத்த அடியும் மற்றும் உடலில் பல பாகங்களில் பலத்த காயங்கள் ஏற்பட்டது. விபத்திற்கு பின்னிட்டு ராமசாமி உடனடியாக ஆம்புலன்ஸ் மூலம் கரூர் வேலாயுதம்பாளையம் அரசு மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டு அங்கு முதலுதவி சிகிச்சை எடுத்துக்கொண்டு, பின்னிட்டு மேல்சிகிச்சைக்காக கரூர் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டு, சிகிச்சை எடுத்துக்கொண்டு மீண்டும் மேல்சிகிச்சைக்காக கோவை கங்கா மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டு சிகிச்சை எடுத்துக்கொண்டு பின்னிட்டு மீண்டும் மேல் சிகிச்சைக்காக கொடுமுடி சரவணன் மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டு சிகிச்சை அளித்தும் சிகிச்சை பலனின்றி இறந்துவிட்டார். இதுவரை மருத்துவ செலவாக ரூ.25,00,000/-வரை செலவாகியுள்ளது.

விபத்து சமயத்தில் இறந்துபோன ராமசாமிக்கு வயது 74. இறப்பதற்கு முன்னர் நல்ல உடல் நலத்துடன் திடகாத்திரமாகவும், ஆரோக்கியமாகவும் இருந்தார். விபத்து சமயத்தில் அவர் விவசாயம் மற்றும் பால்வியாபாரம் செய்து மாதம் ரூ.25,000/- சம்பாதித்து வந்தார். மேற்படி நபரின் இறப்பினால் வருமான இழப்பு ஏற்பட்டு மனுதாரர்கள் கஷ்ட ஜீவனம் செய்து வருகின்றனர். மேற்படி விபத்தானது TN-47-AQ-7927(Splender) என்ற பதிவெண் கொண்ட இரு சக்கர வாகனத்தை கவனக்குறைவாகவும், போக்குவரத்து விதிகளை பின்பற்றாமலும் ஓட்டி வந்த அதன் ஓட்டுநர் தான் முழுக்காரணம் ஆவார். மேற்படி வாகனத்தை அதன் ஓட்டுநர் போக்குவரத்து விதிகளை பின்பற்றி ஓட்டி வந்திருந்தால் இந்த விபத்து நடந்திருக்காது. இந்த விபத்து தொடர்பாக வேலாயுதம்பாளையம் காவல் நிலைய குற்ற எண்.333/2022ல் இ.த.ச.279, 337, பிரிவுகளின் கீழ் 1ம் எதிர்மனுதாரரின் ஓட்டுநருக்கு எதிராக வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது. 1ம் எதிர்மனுதாரர் விபத்து ஏற்படுத்திய இருசக்கர வாகனத்தின் உரிமையாளர் ஆவார். 2ம் எதிர்மனுதாரர் மேற்படி வாகனத்தின் காப்பீட்டு நிறுவனம் ஆகும். ஆகவே 1, 2 எதிர்மனுதாரர்கள் சேர்ந்தோ, தனித்தனியாகவோ மனுதாரர்களுக்கு இழப்பீட்டுத் தொகையாக ரூ.50,00,000/- செலுத்த கடமைப்பட்டவர்கள்.

**2)** 1ம் எதிர்மனுதாரர் அழைப்பாணை பெற்றுக்கொண்டு நீதிமன்றத்தில் அழைத்தும் ஆஜரில்லை என்பதாலும், 2ம் எதிர்மனுதாரர் வழக்கறிஞர் மூலம் ஆஜராகி பின்னர் போதிய சந்தர்ப்பம் வழங்கியும் எதிருரை தாக்கல் செய்யவில்லை என்பதாலும் எதிர்மனுதாரர்களுக்கு எதிராக ஒருதலைபட்ச உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

**3) <u>இம்மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனைகள் யாதெனில்</u> :-**

1) மனு விபத்திற்கு 1ம் எதிர்மனுதாரர் ஓட்டுநரின் அதிவேகமும், அஜாக்கிரதையும் தான் காரணமா?
2) விபத்தினால் ஏற்பட்ட காயத்தின் காரணமாக ராமசாமி என்பவருக்கு இறப்பு ஏற்பட்டுள்ளதா?
3) இம்மனு விபத்திற்கான இழப்பீட்டு தொகையை 1, 2 எதிர்மனுதாரர்கள் மனுதாரர்களுக்கு செலுத்த கடமைப்பட்டுள்ளார்களா?
4) மனுதாரர்களுக்கு கிடைக்கக்கூடிய இழப்பீடு தொகை எவ்வளவு?

4) இம்மனு விசாரணையின் போது, 1ம் மனுதாரர் ம.சா.1 ஆக விசாரிக்கப்பட்டு, அவர் மூலமாக ம.சா.ஆ.1 முதல் ம.சா.ஆ.20 வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. விபத்தை கண்ணுற்ற அர்த்தநாரீஸ்வரன் என்பவர் ம.சா.2 ஆக விசாரிக்கப்பட்டு, அவர் மூலமாக ம.சா.ஆ.21 குறியீடு செய்யப்பட்டுள்ளது. கொடுமுடி சரவணா மருத்துவமனை பொது அறுவை சிகிச்சை நிபுணர் மருத்துவர்.லெட்சுமணன் என்பவர் ம.சா.3 ஆக விசாரிக்கப்பட்டுள்ளார். அவர் மூலம் ஆவணங்கள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை. எதிர்மனுதாரர்கள் தரப்பில் வாய்மொழி சாட்சியம் மற்றும் சான்றாவணம் எதுவும் முன்னிடப்படவில்லை.

**<u>5) பிரச்சனை எண்.1 ன் தீர்வு</u> :-**

மனு விபத்திற்கு 1ம் எதிர்மனுதாரர் ஓட்டுநரின் அதிவேகமும், அஜாக்கிரதையும் தான் காரணமா?

மனுதாரர்கள் தரப்பு வாதம் கேட்கப்பட்டு, வழக்கு ஆவணங்கள்

மற்றும் சாட்சியங்கள் பரிசீலிக்கப்பட்டது. கடந்த 26.09.2022ம் தேதி மாலை 6.15 மணியளவில் நொய்யல் – வேலாயுதம்பாளையம் மெயின் ரோட்டில் வாதி வீட்டின் மேல்புறம் உள்ள ரோட்டில் நடந்த சாலை விபத்தில் காயமடைந்து இறந்துபோன ராமசாமி என்பவரின் இறப்பிற்கு இழப்பீடு கேட்டு மனுதாரர்களால் 1, 2 எதிர்மனுதாரர்களுக்கு எதிராக இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. 1ம் மனுதாரர் இறந்துபோனவரின் மனைவி, 2 மற்றும் 3 மனுதாரர்கள் மகள்கள், 4 மற்றும் 5 மனுதாரர்கள் மகன்கள். ஆவார்கள். மனுதாரர்கள் தரப்பு வழக்கை நிரூபிக்க ம.சா.1 முதல் ம.சா.3 வரையிலான சாட்சிகள் விசாரிக்கப்பட்டு, ம.சா.ஆ.1 முதல் ம.சா.ஆ.21 வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன.

**6)** இறந்துபோனவரின் மனைவி 1ம் மனுதாரர் ம.சா.1 ஆகவும், விபத்தை கண்ணுற்ற அர்த்தநாரீஸ்வரன் என்பவர் ம.சா.2 ஆகவும் விசாரிக்கப்பட்டுள்ளார்கள். ம.சா.2 தனது முதல் விசாரணை சாட்சியத்தில் "கடந்த 26.09.2022 தேதியன்று மாலை சுமார் 6.15 மணியளவில், நொய்யர் to வேலாயுதம்பாளையம் செல்லும் ரோட்டில் ஓரமாக நானும் எங்கள் ஊரை சேர்ந்த ராமசாமி என்பவரும் அவரது வீட்டின் மேல்புறம் ரோட்டின் இடதுபுறம் ஓரமாக நின்று பேசிக்கொண்டிருந்தோம். அப்பொழுது, மேற்படி ரோட்டில் மேற்கிலிருந்து கிழக்கு நோக்கி வந்த TN-47-AQ-7927(Splender) என்ற பதிவு எண் கொண்ட இரண்டு சக்கர வாகனத்தை ஓட்டி வந்த அதன் ஓட்டுநர் அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும் ஓட்டி வந்து ரோட்டின் இடதுபுறம் ஓரமாக மண்ரோட்டில் நின்று கொண்டிருந்த ராமசாமி மீது மோதி விபத்தை ஏற்படுத்திவிட்டார். மேற்படி விபத்தை பார்த்த நானும் அருகில் இருந்தவர்களும் அவரை பார்த்தபோது அவருக்கு

தலையிலும், மேலும் உடல் முழுவதும் பலத்த காயங்கள் ஏற்பட்டிருந்தது. பின்னர் அங்கிருந்தவர்கள் உதவியுடன் ஆம்புலன்ஸ் மூலம் மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தோம். மேற்படி விபத்திற்கு TN-47-AQ-7927(Splender) என்ற பதிவு எண் கொண்ட இரண்டு சக்கர வாகனத்தை அதிவேகமாகவும், கவனக்குறைவாகவும் ஓட்டி வந்த அதன் ஓட்டுநர் தான் முழுக் காரணம் ஆவார். மேற்படி விபத்தை நான் நேரிடையாக பார்த்தேன்." என்று சாட்சியம் அளித்துள்ளார்.

**7)** மனு விபத்து சம்மந்தமாக 1ம் எதிர்மனுதாரரின் ஓட்டுநர் மீதே ம.சா.ஆ.1 முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டுள்ளது. முதல் தகவல் அறிக்கை ம.சா.ஆ.1லிருந்து ம.சா.2 அர்த்தநாரீஸ்வரன் என்பவர் விபத்தை கண்ணுற்றுள்ளார் என்பதும், விபத்தில் காயமடைந்த ராமசாமி என்பவரை ஆம்புலன்ஸ் மூலம் மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு அனுப்பி வைத்துள்ளார் என்பதும் தெரிய வருகிறது. எனவே ம.சா.2 விபத்தை கண்ணுற்றுள்ளார் என்பதை ம.சா.ஆ.1 முதல் தகவல் அறிக்கை உறுதிப்படுத்துகிறது. ஆகவே மனு விபத்தானது 1ம் எதிர்மனுதாரருக்கு சொந்தமான இருசக்கர வாகன ஓட்டுநரின் அதிவேகத்தாலும், அஜாக்கிரதையாலும் ஏற்பட்டுள்ளது என்பதை மனுதாரர்கள் ம.சா.2ன் சாட்சியத்தின் மூலம் நிலைநாட்டி மெய்ப்பித்துள்னர் என்று பிரச்சனை எண்.1க்கு முடிவு காணப்படுகிறது.

**8) பிரச்சனை எண்.2ன் தீர்வு :-**

விபத்தினால் ஏற்பட்ட காயத்தின் காரணமாக ராமசாமி என்பவருக்கு இறப்பு ஏற்பட்டுள்ளதா?

மனுதாரர்கள் தங்கள் மனுவிலும், ம.சா.1ன் சாட்சியத்திலும் விபத்தில்

காயமடைந்த ராமசாமிக்கு தலையில் பலத்த அடியும் மற்றும் உடலில் பல பாகங்களில் கொடுங்காயங்கள் ஏற்பட்டது எனவும், வேலாயுதம்பாளையம் அரசு மருத்துவமனையில் முதலுதவி சிகிச்சை எடுத்துக்கொண்டு, பின்னர் மேல் சிகிச்சைக்காக கோவை கங்கா மருத்துவமனையில் 27.09.2022ம் தேதி முதல் 05.10.2022ம் தேதி வரையிலும் சிகிச்சை எடுத்துக்கொண்டு, பின்னிட்டு மேல் சிகிச்சைக்காக கொடுமுடி சரவணன் மருத்துவமனையில் 26.11.2022ம் தேதி முதல் 04.10.2022ம் தேதி வரையிலும், அதன் பின்னிட்டு கரூர் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் 15.12.2022ம் தேதி முதல் 21.12.2022ம் தேதி வரையிலும் சிகிச்சை பெற்று வந்தார் என்றும், அதனை தொடர்ந்து வெளியில் இருந்து சிகிச்சை பெற்று வந்த நிலையில் 28.02.2023 அன்று இறந்துவிட்டார் என்றும் சாட்சியம் அளித்துள்ளார். மனுதாரர்கள் தரப்பில் காயமடைந்த ராமசாமி என்பவர் வேலாயுதம் பாளையம் அரசு மருத்துவமனையில் சிசிச்சை பெற்றார் என்பதற்கு ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை.

9) கோவை கங்கா மருத்துவமனையில் இருந்து வழங்கிய காயச்சான்றிதழ் ம.சா.ஆ.2 மற்றும் ம.சா.ஆ.3 லிருந்து 27.09.2022ம் தேதியன்று இரவு 7.32 மணிக்கு சிகிச்சைக்காக ராமசாமி அனுமதிக்கப்பட்டு, 05.10.2022ம் தேதியன்று பகல் 1.00 மணிக்கு சிகிச்சையிலிருந்து விடுவிக்கப்பட்டுள்ளார் என்பது தெரிய வருகிறது. மேலும் ம.சா.ஆ.2 மற்றும் ம.சா.ஆ.3ல் கீழ்க்கண்ட காயங்கள் ஏற்பட்டதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

1) 4 X 2 cm abrasion over right frontal aspect of scalp
   2 cm sutured laceration over right patello temporal aspect of scar
2) 1 cm sutured laceration over base of nose
3) 1 cm sutured laceration over anterior aspect of lower right arm

4) 8 cm sutured laceration over supra lateral aspect of right knee pain, swelling, Deformity over right proximal leg.

மேற்சொன்ன காயங்களில் 2, 3 காயங்கள் சாதாரண காயங்கள் என்பதும், 1, 4 காயங்கள் கொடுங்காயங்கள் என்பதும் தெரிய வருகிறது. கோவை கங்கா மருத்துவமனையில் வழங்கிய விடுவிப்பு அறிக்கை ம.சா.ஆ.4 ஆகும். மேற்படி ம.சா.ஆ.4 லிருந்து காயமடைந்த ராமசாமி 27.09.2022 ம் தேதி இரவு 7.32 மணிக்கு மருத்துவமனையில் சிகிச்சைக்கு அனுமதிக்கப்பட்டுள்ளார் என்பதும், 05.10.2022 ம் தேதி பகல் 1.00 மணிக்கு மருத்துவமனையிலிருந்து விடுவிக்கப்பட்டுள்ளார் என்பதும் தெரிய வருகிறது. கோவை கங்கா மருத்துவமனையில் வழங்கிய விடுவிப்பு அறிக்கை ம.சா.ஆ.4 ஆகும். ம.சா.ஆ.5 மேற்சொன்ன மருத்துவமனையில் வழங்கிய மருத்துவ மற்றும் மருந்து பில்கள் ஆகும்.

10) கொடுமுடி சரவணா மருத்துவமனையில் வழங்கிய விடுவிப்பு அறிக்கை ம.சா.ஆ.6 ஆகும். மேற்படி ம.சா.ஆ.6 லிருந்து ராமசாமி என்பவர் 26.11.2022 ம் தேதி காலை 11.00 மணிக்கு மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார் என்பதும், 04.12.2022 ம் தேதியன்று மாலை 6.45 மணியளவில் மருத்துவமனையிலிருந்து விடுவிக்கப்பட்டுள்ளார் என்பதும் தெரிய வருகிறது. கரூர் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் வழங்கிய விடுவிப்பு அறிக்கை ம.சா.ஆ.7 ஆகும். மேற்படி ம.சா.ஆ.7 லிருந்து ராமசாமி என்பவர் 15.12.2022 ம் தேதி மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார் என்பதும், 21.12.2022 ம் தேதியன்று சிகிச்சையிலிருந்து விடுவிக்கப்பட்டுள்ளார் என்பதும் தெரிய வருகிறது.

இறப்பு சான்றிதழ் ம.சா.ஆ.8 லிருந்து தொடர் சிகிச்சை பெற்று வந்த ராமசாமி 18.02.2023 ம் தேதியன்று 39 சேமங்கி, சேமங்கி அஞ்சல், வேட்டமங்கலம் மேற்கு, புகளூர் தாலுக்கா, கரூர் மாவட்டம் - 639 117 என்ற முகவரியில் வைத்து இறந்துள்ளார் என்பது துலங்குகிறது.

11) விபத்தில் காயமடைந்த ராமசாமி என்பவர் விபத்தில் ஏற்பட்ட காயத்தின் காரணமாக இறந்துவிட்டார் என்பதை நிலைநாட்டும் பொருட்டு அவருடைய இறப்பிற்கும் விபத்திற்கும் உள்ள தொடர்பு குறித்து நிலைநாட்டுவதற்காக கொடுமுடி சரவணா மருத்துவமனையின் பொது அறுவை சிகிச்சை மருத்துவர் லெட்சுமணன் என்பவர் ம.சா.3 ஆக விசாரிக்கப்பட்டுள்ளார். ம.சா.3 தனது முதல் விசாரணை சாட்சியத்தில் " கரூர் மாவட்டம், புகளூர் வட்டம், சேமங்கி, வேட்டமங்கலம் மேற்கு, நெ.39 என்ற முகவரியில் வசித்து வந்த பெருமாள் மகன் ராமசாமி என்பவர் கடந்த 26.11.2022 அன்று காலை 11.00 மணிக்கு கொடுமுடி சரவணா மருத்துவமனையில் உள்நோயாளியாக அனுமதிக்கப்பட்டார். 04.12.2022 அன்று மாலை 4.45 மணியளவில் மருத்துவமனையிலிருந்து அவர் விடுவிக்கப்பட்டார். அவருக்கு மூளையில் இரத்தக்குழாய் அடைப்பு ஏற்பட்டதால் இடது கை, கால் செயல் இழப்பு ஏற்பட்டும், நுரையீரல், கிட்னி ஆகியவற்றில் கிருமித்தொற்று ஏற்பட்டும் இரத்தசோகை இருந்ததாலும் அவர் எங்கள் மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டார். அவருக்கு மூளையில் கடுமையான இரத்தக்கட்டு ஏற்பட்டுள்ளது. எங்கள் மருத்துவமனையில் அவர் சிகிச்சைக்கு வருவதற்கு முன்பு அவர் வேறு எங்கும் சிகிச்சை எடுத்ததற்கான ஆவணங்களை கொடுக்கவில்லை. எனவே அதுபற்றி எனக்கு தெரியாது. ராமசாமி என்பவருக்கு ஏற்கனவே

வலது காலில் எலும்பு முறிவு ஏற்பட்டு அதற்கு அவர் மாவு கட்டு போட்டிருந்த நிலையில் சிகிச்சைக்கு வந்தார். அவருடைய இடதுபக்க கை, கால் செயலிழப்பு, மூளையில் ஏற்பட்ட இரத்தக்கட்டு காரணமாக ஏற்பட்டதாகும். தலையில் ஏற்பட்டிருந்த இரத்தக்கட்டு, விபத்தின் காரணமாக ஏற்பட வாய்ப்புள்ளதா என்றால் விபத்து காரணமாக இரத்தக்கசிவு ஏற்பட வாய்ப்புள்ளது. இரத்தக்கட்டு ஏற்பட வாய்ப்பில்லை. அவருக்கு ஏற்பட்ட இடதுபக்க கை, கால் செயலிழப்பு காரணமாக, நான்கைந்து மாதங்கள் தொடர்ச்சியாக இருக்கும்போது, படுக்கைப்புண் ஏற்பட்டு சீல் கட்டி இறப்பு ஏற்பட வாய்ப்புள்ளது" என்று சாட்சியம் அளித்துள்ளார். மேலும் அவருடைய சாட்சியத்திலிருந்து ராமசாமி என்பவருக்கு ஏற்கனவே வலது காலில் எலும்பு முறிவு ஏற்பட்டிருந்தது என்பதும், விபத்தின் காரணமாக இரத்தக் கசிவு எதுவும் ஏற்படவில்லை என்பதும் தெரிய வருகிறது. மேலும் ம.சா.3 ன் சாட்சித்திலிருந்து இறந்துபோனவருக்கு விபத்தின் காரணமாக இரத்தக்கட்டு ஏற்படுவதற்கு வாய்ப்பு இல்லை என்பதும் தெரிய வருகிறது. எனினும் அவருக்கு மூளையில் இரத்தக்குழாய் அடைப்பு ஏற்பட்டதால் இடது கை, கால் செயல் இழப்பு ஏற்பட்டும், நுரையீரல், கிட்னி ஆகியவற்றில் கிருமித்தொற்று ஏற்பட்டும், இரத்தசோகை இருந்ததாலும் மருத்துவமனையில் சிகிச்சைக்கு அனுமதிக்கப்பட்டுள்ளார் என்பது தெரிய வருகிறது. மேலும் அவருக்கு மூளையில் கடுமையான இரத்தக்கட்டு ஏற்பட்டுள்ளது என்பதும் தெரிய வருகிறது.

12) இறந்துபோன ராமசாமிக்கு மூளையில் ஏற்பட்ட இரத்தக்கட்டு விபத்தின் காரணமாக ஏற்படவில்லை என்பது ம.சா.3 ன்

சாட்சியத்திலிருந்து தெரிய வருகிறது. மேலும் அவருக்கு மூளையில் ஏற்பட்ட இரத்தக்கட்டின் காரணமாக இடது கை, கால் செயலிழப்பு ஏற்பட்டு நுரையீரல், கிட்னி ஆகியவற்றில் தொற்று ஏற்பட்டு படுக்கைப்புண் ஏற்பட்டுள்ளதும் தெரிய வருகிறது. எனவே இறந்துபோன ராமசாமி என்பவருக்கு இடது கை, கால் செயலிழப்பு காரணமாக நான்கைந்து மாதங்கள் தொடர்ச்சியாக இருக்கும்போது படுக்கைபுண் ஏற்பட்டுள்ளது. அவ்வாறு இடது கை, கால் செயலிழப்பு ஏற்படுவதற்கு அவருக்கு தலையில் ஏற்பட்ட இரத்தக்கட்டு காரணம் என்பதும், அந்த இரத்தக்கட்டிற்கும் விபத்திற்கும் தொடர்பு இல்லை என்பதும் தெரிய வருகிறது. இறந்துபோனவருக்கு விபத்தின் காரணமாக வலது காலில் காயம் ஏற்பட்டுள்ளது. அவருக்கு வலது காலில் ஏற்ட்ட எலும்பு முறிவிற்கு சிகிச்சைக்கு வரும்போதே மாவுக்கட்டு போடப்பட்டுள்ளதும் தெரிய வருகிறது. ஆனால் அவருடைய இடது கை, கால் செயலிழப்பிற்கு மூளையில் ஏற்பட்ட இரத்தக்கட்டு காரணமாகும். எனவே இறந்துபோனவருடைய இடது கை, கால் செயலிழப்பிற்கும் விபத்திற்கு தொடர்பு இல்லையென்பது தெரிய வருகிறது.

13) ம.சா.ஆ.7 லிருந்து ராமசாமிக்கு தலையில் காயம் ஏற்பட்டிருந்ததால் திருச்சி அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக அனுப்பி வைக்கப்பட்டுள்ளார் என்பதும் தெரிய வருகிறது. ஆனால் அவர் திருச்சி அரசு மருத்துவமனையில் சிகிச்சை எடுத்தார் என்பதற்கான ஆவணங்கள் மனுதாரர்கள் தரப்பில் தாக்கல் செய்யப்படவில்லை. எனவே விபத்தின் காரணமாக ராமசாமி என்பவருக்கு இரத்தக்கசிவு எதுவும் ஏற்படவில்லை என்பதும், விபத்தின் காரணமாக இடது கை, கால்

செயலிழப்பு ஏற்படவில்லை என்பதும் தெரிய வருகிறது. மேலும் ம.சா.ஆ.4 விடுவிப்பு அறிக்கையிலிருந்து இறந்துபோன ராமசாமி என்பவர் ஏற்கனவே கடுமையான சிறுநீரக நோயினால் பாதிக்கப்பட்டுள்ளார் என்பது தெரிய வருகிறது. எனவே இறந்துபோனவருக்கு இடது கை, கால் செயலிழப்பு ஏற்பட்டதற்கும் நுரையீரல், கிட்னி ஆகியவற்றில் கிருமித்தொற்று ஏற்பட்டதற்கும் அதன் காரணமாக படுக்கை புண் ஏற்பட்டதற்கும் விபத்தினால் ஏற்பட்ட காயத்திற்கும் தொடர்பு இல்லை என்பதாலும் இறந்துபோனவருக்கு விபத்தின் காரணமாக ஏற்பட்ட காயத்தின் காரணமாக இறப்பு ஏற்பட்டது என்பதை மனுதாரர்கள் தகுந்த சாட்சியங்கள் மூலம் நிலைநாட்ட தவறிவிட்டனர். எனவே விபத்தினால் ஏற்பட்ட காயத்தின் காரணமாக ராமசாமி என்பவருக்கு இறப்பு ஏற்படவில்லை என்று இந்த பிரச்சனை எண்.2 க்கு தீர்வு காணப்படுகிறது.

14) **<u>பிரச்சனை எண்.3 ன் தீர்வு</u> :-**

இம்மனு விபத்திற்கான இழப்பீடு தொகையை 1, 2 எதிர்மனுதாரர்கள் மனுதாரர்களுக்கு செலுத்த கடமைப்பட்டுள்ளார்களா?

விபத்து ஏற்படுத்திய இருசக்கர வாகனம் 1ம் எதிர்மனுதாரருக்கு சொந்தமானது. 1ம் எதிர்மனுதாரர் வாகனம் விபத்து தேதியில் 2ம் எதிர்மனுதாரர் நிறுவனத்தில் காப்பீடு செய்யப்பட்டுள்ள விபரம் 2ம் எதிர்மனுதாரர் தரப்பில் மறுக்கப்படவில்லை. இம்மனு விபத்து 1ம் எதிர்மனுதாரர் ஓட்டுநரின் அதிவேகத்தாலும், அஜாக்கிரதையாலும் தான் ஏற்பட்டுள்ளது என முடிவு காணப்பட்டுள்ள நிலையில், இம்மனு விபத்திற்கான இழப்பீட்டுத் தொகையை 1, 2 எதிர்மனுதாரர்கள் சேர்ந்தோ,

தனித்தனியாகவோ மனுதாரர்களுக்கு செலுத்த கடமைப்பட்டவர்கள் என்று பிரச்சனை எண்.3-க்கு முடிவு காணப்படுகிறது.

**15) பிரச்சனை எண்.4 ன் தீர்வு :-**

மனுதாரர்களுக்கு கிடைக்கக்கூடிய இழப்பீடு தொகை எவ்வளவு?

இறந்துபோன ராமசாமி விபத்தில் ஏற்பட்ட காயத்தின் காரணமாக இறந்துவிட்டார் என்பதையும், விபத்திற்கும் அவரது இறப்பிற்கும் உள்ள தொடர்பை மனுதாரர்கள் நிலைநாட்ட தவறிவிட்டனர் என பிரச்சனை எண்.2 க்கு முடிவு காணப்பட்டுள்ளது. எனவே விபத்தினால் ஏற்பட்ட காயத்தின் காரணமாக அவர் இறந்துவிட்டார் எனவும் அதன் காரணமாக மனுதாரர்கள் இழப்பீடு பெறுவதற்கு தகுதியுடையவர்கள் எனவும் முடிவு செய்ய இயலவில்லை. எனினும் இறந்துபோனவருக்கு ஏற்பட்ட ஊனம், வலி மற்றும் வேதனை அனைத்தும் அவருடைய தனிப்பட்ட இழப்பீடுகளாகும். விபத்தினால் ஏற்பட்ட காயத்தின் காரணமாக ராமசாமி இறந்துவிட்டார் என்பதை மனுதாரர்கள் நிலைநாட்ட தவறியதால் மனுதாரர்கள் வருமான இழப்பிற்கான இழப்பீடு பெறுவதற்கு தகுதியுடையவர்கள் அல்ல. ஆனால் விபத்தின் காரணமாக காயமடைந்த ராமசாமி மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்தபோது செலுத்திய மருத்துவமனை மற்றும் மருந்து பில்களில் உள்ள தொகைகளை மட்டும் பெறுவதற்கு மனுதாரர்கள் தகுதியுடையவர்கள் ஆகிறார்கள். இறந்துபோனவருக்கு சிகிச்சையளித்த வகையில் ரூ.2,30,456/- செலவாகியுள்ளது என்பது ம.சா.ஆ.5 லிருந்து தெரிய வருகிறது. ஆகவே மருத்துவமனை மற்றும் மருந்து செலவுகளுக்கான தொகை ரூ.2,30,456/- என்பது ரூ.2,30,400/- என முழுமையாக்கப்பட்டு மனுதாரர்களுக்கு

இழப்பீடாக வழங்கி உத்தரவிடப்படுகிறது. மருத்துவ செலவுகளுக்காக செலுத்திய தொகைகள் மட்டும் பெறுவதற்கு மனுதாரர்கள் தகுதியுடையவர்கள் என பிரச்சனை எண்.4-க்கு தீர்வு காணப்படுகிறது.

**16)** இம்மனுவை தமிழ்நாடு மோட்டார் வாகன விபத்து இழப்பீட்டு விதி பிரிவு 24(1)-ன் கீழ் ரூ.50,00,000/- இழப்பீட்டுத் தொகையாக கேட்டு மனுதாரர்கள் தாக்கல் செய்துள்ளனர். மனு பரிகாரத்திற்கு நீதிமன்ற முத்திரைக் கட்டணம் ரூ.49,372.50 என மதிப்பீடு செய்துள்ளனர். மனுதாரர்கள் நீதிமன்ற முத்திரைக் கட்டணமாக ரூ.372.50 செலுத்தியுள்ளனர். மீதமுள்ள முத்திரைக் கட்டணம் ரூ.49,000/-யை பின்னர் செலுத்துவதற்கு விலக்கு அளிக்கக் கோரி தமிழ்நாடு மோட்டார் வாகன விபத்து இழப்பீட்டு விதி பிரிவு 24(3)-ன் கீழ் இடைக்கால மனு எண்.1/2023 என்ற மனு தாக்கல் செய்யப்பட்டு, அம்மனு 27.04.2023-ஆம் தேதியில் அனுமதிக்கப்பட்டு, நீதிமன்ற முத்திரைக் கட்டணம் பின்னர் செலுத்துவதற்கு உத்தரவிடப்பட்டுள்ளது. மேலும் மனுதாரர்கள் இந்த மனுவில் ரூ.50,00,000/- இழப்பீடு கோரியுள்ளனர். ஆனால் இந்த மனுவில் மனுதாரர்களுக்கு ரூ.2,30,400/- இழப்பீடு வழங்க இத்தீர்ப்பாயம் முடிவு செய்துள்ளது. மேற்படி இழப்பீட்டுத் தொகைக்கு மனுதாரர்கள் பாக்கி நீதிமன்றக் கட்டணம் செலுத்த கடமைப்பட்டவர்கள் ஆவார்கள். மேற்படி இழப்பீட்டுத் தொகை ரூ.2,30,400/-க்கு உரிய நீதிமன்றக் கட்டணம் ரூ.1,676.50/- செலுத்த வேண்டும். மனுதாரர்கள் ஏற்கனவே நீதிமன்ற கட்டணமாக ரூ.372.50 செலுத்தியுள்ளனர். பாக்கி நீதிமன்றக் கட்டணம் ரூ.1,304/-யை 15 நாட்களுக்குள் மனுதாரர்கள் செலுத்த வேண்டுமென்று

உத்தரவிடப்படுகிறது. தவறும்பட்சத்தில் மனுதாரர்களுக்கு கிடைக்கக் கூடிய இழப்பீட்டுத் தொகையில் பாக்கி நீதிமன்ற முத்திரைக் கட்டணம் ரூ.1,304/-யை கழித்துக் கொள்ளப்படும் என்று உத்தரவிடப்படுகிறது.

முடிவில், இம்மனு பகுதியாக அனுமதிக்கப்பட்டு, மனுதாரர்களுக்கு 1, 2 எதிர்மனுதாரர்கள் சேர்ந்தோ, தனித்தனியகவோ இழப்பீட்டுத் தொகையாக ரூ.2,30,400/- (ரூபாய் இரண்டு இலட்சத்து முப்பதாயிரத்து நானூறு மட்டும்) செலுத்த வேண்டுமென்றும், மேற்படி இழப்பீட்டுத் தொகைக்கு மனு தாக்கல் செய்த தேதியிலிருந்து தொகை முழுவதும் செலுத்தும் நாள் வரை 7.5% வட்டியும் மற்றும் செலவுத் தொகையும் செலுத்த உத்தரவிடப்படுகிறது. மேலும் 1, 2 எதிர்மனுதாரர்கள் மனுதாரர்களுக்கு இம்மனு செலவுத் தொகையாக ரூ.9,295/-யை செலுத்த வேண்டுமென்று உத்தரவிடப்படுகிறது. மேற்படி இழப்பீட்டுத் தொகை மற்றும் அதன் வட்டித் தொகை, செலவுத் தொகை ஆகியவற்றை ஒரு மாத காலத்திற்குள் தாந்தோன்றிமலை கிளை, இந்தியன் ஓவர்சீஸ் வங்கி, கணக்கு எண்.DJKARURMCOP12923 IFSC.No.IOBA0000738 என்ற வங்கி கணக்கில் வைப்பீடு செய்ய வேண்டுமென்று உத்தரவிடப்படுகிறது. மேற்சொன்ன இழப்பீட்டுத் தொகை முழுவதையும் மனுதாரர்கள் அனைவரும் கூட்டாக பெறுவதற்கு தகுதியுடையவர்கள் என்று உத்தரவிடப்படுகிறது. மேலும் வழக்குரைஞர் ஊதியம் ரூ.7,608/– என நிர்ணயம் செய்யப்படுகிறது. மேலும், மனுதாரர்கள் எஞ்சியுள்ள நீதிமன்றக் கட்டணம் ரூ.1,304/-யை 15 நாட்களுக்குள் செலுத்த வேண்டுமென்று உத்தரவிடப்படுகிறது. தவறும்பட்சத்தில் மனுதாரர்களுக்கு கிடைக்கக் கூடிய இழப்பீட்டுத் தொகையில் பாக்கி நீதிமன்றக் கட்டணம் ரூ.1,304/-

கழித்துக் கொள்ளப்படும் என்றும் உத்தரவிடப்படுகிறது.

| செலவுத் தொகை விபரம் | | மனுதாரர்கள் ரூ.பை. | |
|---|---|---|---|
| வழக்குரை அதிகாரம் | - | 10.00 | |
| நீதிமன்ற கட்டணம் | - | 1,676.50 | |
| வழக்குரைஞர் ஊதியம் | - | 7,608.00 | |
| மொத்தம் | - | **9,294.50** | **முழுமையாக ரூ.9,295/-** |

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் குறிப்பெடுக்கப்பட்டு, கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் படித்துப் பார்த்து பிழை நீக்கம் செய்யப்பட்டு, 2024-ஆம் ஆண்டு ஜுன் திங்கள் 25-ஆம் நாள் அவையறிய பகரப்பட்டது.

R SHANMUGA SUNDARAM

Digitally signed by R SHANMUGA SUNDARAM
DN: cn=R SHANMUGA SUNDARAM, ou=KARUR, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=TAMILNADU, c=IN

**மோட்டார் வாகன விபத்துக்**
**கோருரிமை தீர்ப்பாய நீதிபதி,**
**முதன்மை மாவட்ட நீதிபதி,**
**கரூர்.**

**<u>மனுதாரர்கள் தரப்பு சாட்சியங்கள்</u>** :-

ம.சா.1 பழனியம்மாள்

ம.சா.2 அர்த்தநாரீஸ்வரர்

ம.சா.3 மருத்துவர்.லெட்சுமணன்

**மனுதாரர்கள் தரப்பு சான்றாவணங்கள்** :-

ம.சா.ஆ.1 முதல் தகவல் அறிக்கை கணினி பதிவிறக்க நகல்.

ம.சா.ஆ.2 கோவை கங்கா மருத்துவமனையில் வழங்கிய காயச்சான்றிதழ்.

ம.சா.ஆ.3 கோவை கங்கா மருத்துவமனையில் வழங்கிய காயச்சான்றிதழ்.

ம.சா.ஆ.4 கோவை கங்கா மருத்துவமனை விடுவிப்பு அறிக்கை.

ம.சா.ஆ.5 மருத்துவ மற்றும் மருந்து பில்கள்.

ம.சா.ஆ.6 கொடுமுடி சரவணா மருத்துவமனையில் வழங்கிய விடுவிப்பு அறிக்கை.

ம.சா.ஆ.7 21.12.2022 கரூர் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் வழங்கிய விடுவிப்பு அறிக்கை.

ம.சா.ஆ.8 இறப்பு சான்றிதழ்.

ம.சா.ஆ.9 வாரிசு சான்றிதழ்.

ம.சா.ஆ.10 இறந்துபோனவரின் ஆதார் அடையாள அட்டை புகைப்பட நகல்.

ம.சா.ஆ.11 1ம் மனுதாரர் ஆதார் அடையாள அட்டை புகைப்பட நகல்.

ம.சா.ஆ.12 1ம் மனுதாரர் வங்கி கணக்கு புத்தக நகல்.

ம.சா.ஆ.13 2ம் மனுதாரர் ஆதார் அடையாள அட்டை நகல்.

ம.சா.ஆ.14 2ம் மனுதாரர் வங்கி கணக்கு புத்தக நகல்.

ம.சா.ஆ.15 3ம் மனுதாரர் ஆதார் அடையாள அட்டை நகல்.

ம.சா.ஆ.16 3ம் மனுதாரர் வங்கி கணக்கு புத்தக நகல்.

ம.சா.ஆ.17 4ம் மனுதாரர் ஆதார் அடையாள அட்டை நகல்.

ம.சா.ஆ.18 4ம் மனுதாரர் வங்கி கணக்கு பாஸ்புத்தக நகல்.

ம.சா.ஆ.19 5ம் மனுதாரர் ஆதார் அடையாள அட்டை நகல்.

ம.சா.ஆ.20 5ம் மனுதாரர் வங்கி கணக்கு பாஸ்புத்தக நகல்.

ம.சா.ஆ.21 ம.சா.2-ன் ஆதார் அடையாள அட்டை புகைப்பட நகல்.

<u>எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சியம் மற்றும் சான்றாவணம்</u> :- இல்லை

R SHANMUGA SUNDARAM

Digitally signed by R SHANMUGA SUNDARAM
DN: cn=R SHANMUGA SUNDARAM, ou=KARUR, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=TAMILNADU, c=IN

**மோட்டார் வாகன விபத்துக்**
**கோருரிமை தீர்ப்பாய நீதிபதி,**
**முதன்மை மாவட்ட நீதிபதி,**
**கரூர்.**